# உன்னதப்பாட்டு

காலம்

| | |
|---|---|
| 971 **கி.மு.** | சாலொமோன் முதலாவது மனைவியை திருமணம் செய்தர். |
| 950 **கி.மு.?** | சாலொமோன் பாடல்களை எழுதுதல். |
| 931 **கி.மு.** | சாலொமோனின் மரணம். |

**பின்னணி**

உன்னதப்பாட்டு, சாலொமோனின் காதல் என்றும் அழைக்கப்படுகின்றது. இது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பாடப்பெற்ற பாடல்களின் தெகுப்பாகும். இயேசுக்கிறிஸ்த்து சபையை நேசிப்பதையும் உவமையாக கூறுகிறது.

பாடல்கள் காதலையும் திருமணத்தையும் விபரிக்கின்றது. ஆனாலும் எந்த இடத்தில் திருமணம் நிறைவேறியது அறியமுடியாதுள்ளது. (4:16–5:1) உன்னதப்பாட்டானது உணர்வுபூர்வமாகவும், சரீரப்பிரகாரமான திருமணத் தேவையாகவும் உள்ளது.

**எழுதியவர்**: **சாலொமோன்**.(1:1).

சாலொமோனுக்கு ஆயிரம் மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருந்தனர். (1 இராஜா 11:3), அவரது பாவமான பல திருமணங்களுக்கு முன்பாக இந்த பாடல்களை தன்னுடைய வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில் எழுதியிருக்கலாம், பல வேத ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, 1:1–3:5 காலப்பகுதிகள் உண்மையான பெண்ணின் காதலை வெளிப்படுத்துவதாகவும்,

அதேநேரம் மிகுதிப்பகுதிகள் சாலொமோன் தன்னுடைய ராஜ அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேய்ப்பனிடமிருந்து பெண்களை தூரவைத்திருப்பதாக கூறுகின்றது.

**காலமும் இடமும்**.: 950. கி.மு. எருசலேம் நகரம்.

**நோக்கம்.**

- *மீள்பார்வை*: கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள காதலைவெளிப்படுத்துவதே உன்னதப் பாடலாகும்.

- *கிறிஸ்தவர்கள் இந்தப்பாடல்களை கிறிஸ்த்துவிற்கும் அவரது மணவாட்டியாகிய சபைக்கும் இடையில் உள்ள அன்பைப்பிரதிபலிப்பதாகப் பார்க்கிறார்கள்*

**முக்கிய சம்பவங்கள்**.

- வேதாகமப் புத்தகங்களில் உன்னதப் பாடல் புத்தகமானது பாலியல் அன்பைக்குறுத்து மிக நெருக்கமாக கூறுகின்றது.

- கர்த்தருடைய பெயரை வெளிப்படுத்தாமல் இருக்கும் இரண்டு புத்தகங்களில் உன்னப்பாட்டும் ஒன்றாகும், மற்றது எஸ்த்தர் புத்தகமாகும்.

**நீதிமொழிப்புத்தகத்துடன் உன்னதப்பாடல் புத்தகத்தை ஒப்பிட்டுப் பார்த்தல். :**

- இரண்டு புத்தகங்களும் தண்ணீரை உருவகமாகப் பயன்படுத்துகின்றன. (4:15; நீதி. 5:15-18).

- இரண்டுபுத்தகங்களும் பெண்மான், அல்லது பெண்முயல் என்பவற்றை கிருபையை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2:7, 9, 17; நீதி. 5:19).

- பணத்தினால் காதலை வாங்கமுடியாது. (8:7) அல்லது ஞானத்தை வாங்க முடியாது (நீதி 3:13-15; 8:10-11).

• உன்னதப் பாடல்களில் காணப்படும் தொனியானது தீர்க்கதரிசினியில் தொனிக்கு ஒப்பாகக் காணப்படுகின்றது. 8:1–9:12. இந்த இரண்டு தொனிகளும் ஜனங்களை மிகவும் விரைவாக இழுத்துக் கொள்கின்றது.

**பிரசங்கி :**

• பிரசங்கிப்புத்தகம், சாலொமோன் சந்தோசத்தைத் தேடுவதும் மாயை என்று கூறுகின்றது. உன்னதப்பாட்டில் ஒரு முறையாவது கூறப்பட்டுள்ளது. அவர் அரசனாக இருக்கும்போது இன்பத்தை அனுபவித்திருக்கலாம். ஆனாலும் எல்லாம் மாயை என்றே பிரசங்கிப் புத்தகத்தில் கூறுகின்றார்.

**மேய்ப்பனின் பகுதி (1:1–3:5)**

**1:1–2:2 "என்ஜீவனை உயிர்ப்பியும். "**

சூலமித்திரியாகிய பெண் இந்த கதையை வழிநடத்துகிறாள். (6:13), அவள் தன்னுடைய காதலை அவனுக்கு சந்தோஷமாக வெளிப்படுத்துகிறாள். (1:2-4, 7), பின்பு அவள் தன்னை விபரிக்குகிறாள். (1:5-6). அவளுடைய சினேகிதிகள் எருசலேமின் இளம் பெண்கள் (2:7), தங்கள் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். (1:4). சூலமித்திரி தன்னுடைய சகோதரனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்யும்படி வற்புறுத்தப்படுகின்றாள், ஆனால் அவள் தன்னுடை சொந்தத் தோட்டத்தை தவிர்த்து விடுகிறாள், அதன் அர்த்தம் அவள் தன்னை கவனிப்பதில்லை என்பதாகும். (1:6). சூலமித்திரி மேய்ப்பனிடத்தில் அவரை எங்கே சந்திக்கலாம் என்று வினவுகின்றாள். (1:7); அவன் அவளை தன்னிடத்திற்காய் அழைத்து, அவளது அழகைப் புகழ்கின்றான். (1:8), இன்னும் பல மயக்கும் சொற்களைப் பரிமாறுகின்றார்கள். (1:9–2:2). சூலமித்திரி தன்னை சாரோனின் றோஜா என்று வர்னிக்கிறாள் (2:1). முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள். (2:2).

**2:3-7** ***தன்னுடைய இரகசியமானதும் வெளிப்படையானதுமான அன்பை வெளிப்படுத்துகிறாள்.*** சூலமித்தி, வெளிப்படையாகவே தன் நேசரின் அன்பை வெளிப்படுத்துகின்றாள். (2:4-5) அதுமட்டுமன்றி இரகசியமாகவும் வெளிப்படுத்துகின்றாள். (2:3, 6). எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப்

பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன். (2:7; 3:5; 8:4, 6-7).

**2:8-17** *"என்னை நேசிப்பவளின் சத்தம்."* சூலமித்தி மேய்ப்பனின் இனிமையான வார்த்தைகளை மீட்டுப்பார்க்கிறாள், (2:8-13). உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்று மேய்ப்பர் கூறுகின்றார். (2:14), சூலமித்தி அதிக அன்பாக மறு மொழி கொடுக்கின்றாள். 2:16-17). என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள். அவர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.
2:15,

**3:1-5** **நடுஇரவில் விடும் தூது**. சூலமித்தி தன்னுடைய அன்பரை இழந்து விட்டதாக கனவுகாண்கின்றாள், ஆனால் அதிக ஆர்வத்துடன் தேடும்போது கண்டுபிடிக்கின்றாள்.

## இரண்டாம் செயற்பாடு.:முடிக்குரிய அரசனைத் திருமணம் செய்தல். (3:6–8:4)

**3:6-11** *அறுபது பேர்வீரருடன் மகிமையில் வரும் இவர் யார்.* மணவாட்டி சாலமோனை அரசமகிமையில் வைத்து விபரிக்கின்றாள், தன்னுடைய அரச பாதுகாவலர்களுடன் எருசலேமிற்கு திருமணத்திற்காக வந்திருக்கின்றார். வந்திருக்கின்றார்,

**4:1-15** அவருடைய துதிகள். *: "புறாவைப் போல,வெள்ளாடுகளைப் போல, செம்மறியாட்டைப் போல.."* சாலொமோன் தன்னுடைய மணவாட்டியை புகழ்ந்து, தன்னுடைய அன்பை வெளிக்காட்டுகின்றார், இயற்கைகள் மலர்ந்து துதிப்பது போல். (6:4-10; 7:1-9).

**4:16–5:1** ***அவளுடைய பிரதிபலிப்பு.*** *: **"உம்முடைய தோட்டத்திற்கு வாரும் "*** அவர்தன்னுடைய அழகான வார்த்தைகளினாலே விபரிக்கின்றாள், அன்பாக வரும்படி அழைக்கின்றாள், அவர்களின் திருமணத்தை நடத்துமாறும் வேண்டிக் கொள்கின்றாள். ஒரு பெரும்கொண்டாட்டத்துடன் திருமணம் நிறைவேற்றப்பட்டது.

**5:2-8** சூலமித்தி கனவுகண்கிறாள். இரவு நேசர் வந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றான். பின்பு மறைந்து விடுகின்றான். அவரைத் தேடிக் களைத்தபிற்பாடு, தன்னுடைய நண்பர்களிடம் அவரைத் தேடித்தரும்படி வேண்டுகின்றாள். இது போலவே இன்றும் கிறிஸ்த்து வாசல் படியில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறார்.

**5:9–6:3** *"**மற்றவர்களைவிடச் சிறந்தவராக இருப்பது ஏன்**? நீர் கேட்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது."* ஸ்திரீ களுக்குள் ரூபவதியே! மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? நீ இப்படி எங்களை ஆணையிட, மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? (5:9). என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம் பேர்களில் சிறந்தவர். அவர் தலை தங்கமயமாயிருக்கிறது; அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப்போல் கருமையாயுமிருக்கிறது. (5:10-16; 4:1-15). உன் நேசர் எங்கே போனார்? ஸ்திரீ களில் ரூபவதியே! உன் நேசர் எவ்விடம் போய்விட்டார்? உன்னோடேகூட நாங்களும் அவரைத் தேடுவோம். தோட்டங்களில் மேயவும், லீலிபுஷ்பங்களைக் கொய்யவும், என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தவர்க்கப் பாத்திகளுக்கும் போனார் நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்; அவர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார். (6:1-3).

**6:4–7:9** ***அவர்கள் மீண்டும் இணைந்தது அதிக துதிகளைக் கொடுத்தது***. . என் பிரியமே! நீ திர்சாவைப் போல் சௌந்தரியமும், எருசலேமைப் போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமானவள். உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு, அவைகள் என்னை வென்றது; உன் அளகபாரம் கீலேயாத் மலையிலே தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது. உன் பற்கள் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிறவைகளும், ஒன்றானாலும் மலடாயிராமல் இரட்டைக் குட்டியீன்றவைகளுமான ஆட்டுமந்தையைப்போலிருக்கிறது. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம்போலிருக்கிறது. (6:4-10); **அவள் மறு மொழியாக** பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்சச்செடிகள் துளிர்விட்டு, மாதளஞ்செடிகள் பூத்ததா என்று அறியவும், வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன். நினையாததுக்கு முன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று. 6:11-12) **பின்பு அவர் விபரிக்கத் தொடங்குகிறார்**. ராஜகுமாரத்தியே! பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது; உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழிற்காரரின் வேலையாகிய ஆரணம் போலிருக்கிறது. உன் நாபி திராட்சரசம் நிறைந்த

வட்டக்கலசம்போலிருக்கிறது; உன் வயிறு லீலிபுஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது. உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது. உன் கழுத்து யானைத் தந்தத்தினால் செய்த கோபுரத்தைப்போலவும், உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப்போலவும், உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தைப்போலவும் இருக்கிறது. (7:1-9).

**7:10–8:4 "இப்போது அவர்கள் தேன்நிலவுக்குச் செல்கிறார்கள்**.
ஆ, நீர் என் தாயின் பால்குடித்த என் சகோதரனைப்போலிருந்தீரானால், நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன்; என்னை நிந்திக்கவுமாட்டார்கள். நான் உம்மைக் கூட்டிக்கொண்டு, என் தாயின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோவேன்; நீர் என்னைப் போதிப்பீர், கந்தவர்க்கமிட்ட திராட்சரசத்தையும், என் மாதளம்பழரசத்தையும் உமக்குக் குடிக்கக்கொடுப்பேன். அவர் இடதுகை என் தலையின் கீழிருக்கும், அவர் வலதுகை என்னை அணைக்கும். அவளைக்குழப்ப வேண்டாம் என சினேகிதிகளுக்கு கட்டளையிடுகின்றார். எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன். (8:4; 2:7; 3:5).

**முடிவுரை : திருமண வாழ்வின் அதிசயம். (8:5-14)**

**8:5-7 திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது**;

*அவளும் நேசரும் தேன்நிலவிலிருந்து திரும்பி வருகின்றார்கள். சுலமித்தித்தி காதலின் வல்லமை பற்றி பேசுகின்றாள் அத்துடன் இது பொறாமையையும் கொண்டுவரும் என்று கூறுகின்றாள்.* தன் நேசர்மேல் சார்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்? கிச்சிலிமரத்தின்கீழ் உம்மை எழுப்பினேன்; அங்கே உமது தாய் உம்மைப் பெற்றாள்; அங்கே உம்மைப் பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்றாள். நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப்போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப்போலவும் வைத்துக்கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல்

அக்கினித்தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது; ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டைபண்ணப்படும். செல்வத்தால் அன்பை விலைக்கு வாங்கமுடியாது.

**8:8-9** *"சிறிய சகோதரியின் நிலை என்ன ?"* சூலமித்தியின் சகோதரிகள் தங்களுடைய சிறிய சகோதரியின் மீது தாங்கள் கவனம்எடுத்து அவளைப் பாதுகாத்துக் கொள்வதாக வாக்களித் தனர். நமக்கு ஒரு சிறிய சகோதரியுண்டு, அவளுக்கு ஸ்தனங்களில்லை; நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்? அவள் ஒரு மதிலானால், அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம்; அவள் கதவானால், கேதுருப் பலகைகளை அதற்கு இணைப்போம்.

**8:10-14** ***அவருடைய திராட்சைத் தோட்டம்.***
நான் மதில்தான், என் ஸ்தனங்கள் கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம் பெறலானேன். பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது, அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக் காசு கொண்டுவரும்படி விட்டார். என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது; நேசரோ! உமக்கு அந்த ஆயிரமும், அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும். (8:10-12).

**நேசர் அவளைப் பாடும்படி கூறுகிறார்**.
தோட்டங்களில்வாசம்பண்ணுகிறவளே! தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள்; நானும் அதைக் கேட்கட்டும். என் நேசரே! தீவிரியும், கந்தவர்க் கங்களின் மலைகள்மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும். (8:13-14).

நன்றி
திராணி